செய்தி வெளியீடு எண்– 8 நாள்– 04.01.2010

## செய்தி வெளியீடு

## கோவையில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி; கோவை மாநகர் மற்றும் சுற்றுப்புறச் சாலைகள் 59 கோடியே 85 இலட்சம் ரூபாய்ச் செலவில் மேம்படுத்தப்படும்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

கோவையில் 2010 ஜூன் திங்களில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி, மாநாடு நடைபெறக்கூடிய கொடீசியா வளாகம் அமைந்துள்ள சேலம்–கொச்சின் சாலையை இணைக்கும் கோவை இரயில் நிலையம், பேருந்து நிலையம், விமான நிலையம் ஆகியவற்றுக்கான சாலைகள்; மாநாட்டுத் திடலின் அருகே தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் சித்ரா–குரும்பாளையம் சாலை மற்றும் சிங்காநல்லூர் பேருந்து நிலையம், கோவை மத்தியப் பேருந்து நிலையம், இராமநாதபுரம் மற்றும் போத்தனூர் ரயில் நிலையம் ஆகியவற்றிற்குச் செல்லும் சாலைகள் முதலான நெடுஞ்சாலைத்துறைக்கு உட்பட்ட கோவை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள 96 கிலோமீட்டர் நீளமுடைய 72 சாலைகளை 59 கோடியே 85 இலட்சம் ரூபாய்ச் செலவில் மேம்படுத்திட நிர்வாக ஒப்புதல் வழங்கி முதலமைச்சர் கலைஞர் இன்று (4.1.2010) ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.